ஆலந்தூர் தொகுதி 167 வது வட்டத்தில் முதலமைச்சரின் விரிவான காப்பீடு அட்டை 500 நபர்களுக்கு குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளருமான தா. மோ.அன்பரசன் நங்கநல்லூர் என்.வி.ஆர்.திருமண மண்டபத்தில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் 12வதுமண்டல குழு தலைவரும் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என்.சந்திரன். அதிகாரி சீனிவாசன். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு.பிரகாஷ். .மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன். வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன். மாவட்ட பிரதிநிதி வெங்கட்ரமணன், அபிஷேக், நல சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று வடலூர், திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் நடைபெற்ற திருஅருட்பிரகாச வள்ளலாரின் 202ஆம் வருவிக்க உற்றநாள் விழாவில் கலந்து கொண்டு, சன்மார்க்க கொடியினை ஏற்றி வைத்து, வள்ளலார் குறித்த நூலினை வெளியிட்டு, அன்னதானத்தை தொடங்கி வைத்தனர். உடன் எம்.கே.விஷ்ணுபிரசாத் எம்.பி.. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா. சுகுமார், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்ய செந்தில்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா. இராஜாராம், இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் ஜெ.பரணிதரன், உதவி ஆணையர் ஆர்.சந்திரன். அறங்காவலர் குழுத் தலைவர் க.அழகானந்தம் மற்றும் அறங்காவலர்கள், நிர்வாக அலுவலர் ஜெ.ராஜாசரவணகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

எண்ணூர் விரைவுச் சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த

எண்ணூர் போக்குவரத்து காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி !

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.6-

சென்னை, மணலி, எண்ணூர் விரைவுச் சாலையில் நிகழ்ந்த சாலைவிபத்தில் உயிரிழந்த எண்ணூர் போக்குவரத்துக் காவலரின் குடும்பத்தி னருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

சென்னை, எண்ணூர் காவல் நிலையத்தில், போக்குவரத்துப் பிரிவில் காவலராகப் பணியாற்றிவந்த திரு. லக்ஷ்மணன் (வயது 37) என்பவர் நேற்று (05.10.2024) காலை சுமார் 6.00 மணியளவில் அம்பத்தூரில் நடைபெறவிருந்த காவல்துறை பயிற்சி அணிவகுப்பில் கலந்து கொள்வதற்காக சென்னை, மணலி, எண்ணூர் விரைவுச் சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக சாலையோரம் நின்று கொண்டிருந்த கிரேன் மீது மோதிய விபத்தில் பலத்த காயம் ஏற்பட்டு உடனடியாக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும், இன்று காலை 8.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

போக்குவரத்துக் காவலர் திரு.லக்ஷ்மணன் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

திரு.லக்ஷ்மணன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தின ருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு வருகை தரும்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

மாவட்ட செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தகவல்!

திருவள்ளூர், அக்.6

திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என மாவட்ட செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் பட்டாபிராம் ஜெய்கிரிஷ் திருமண மண்டபத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெற்றது.

மாநில ஆதிதிராவிட நலகுழுச் செயலாளர் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணாசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், மாவட்ட பொரு ளாளர் பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி. விமல்வர்ஷன், வி.குமார், காஞ்சனா சுதாகர், ஜெ.மகாதேவன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினார்.

அப்போது பேசுகையில் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு துணை முதல மைச்சராக அறிவித்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றிகளையும் மற்றும் வாழ்த்துகள் இக் கூட்டத்தில் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று நமது மாவட்டத்திற்கு முதல் முதலாக அரசு நிகழ்ச்சிக்கும் மற்றும் கட்சி நிகழ்ச்சிக்கும் வருகை தர உள்ளார் எனவே திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் இரு வண்ணக் கொடிகள் தோரணைகள் கட்டி மிகச் சிறப்பான முறையில் வரவேற்பு அளிக்க வேண்டும்.

இந்தியா தேர்தல் ஆணையர் வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாம்களில், திருவள்ளூர் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள். மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வார்டு மற்றும் கிளை கழக/செயலாளர்கள், பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதிகள் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன், மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பு வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), இந்தப் பணியினை முழுமையாக ஈடுபட்டு 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOக்களுடன் உடனிருந்து கண்காணிக்க கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் இக்கூட்டத்தில் முன்னதாக கழகத் துணைப் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான மீஞ்சூர் க.சுந்தரம் அவர்கள் மறைவையொட்டி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி இரண்டு நிமிடம் மௌனம் அஞ்சலி செலுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் சன்.பிரகாஷ், ஜி.நாராயணபிரசாந்த், ஜி. ராஜேந்திரன், பேபி சேகர், பொன்.விஜயன், டி.தேசிங்கு, டி.ராமகிருஷ்ணன், ஆர்.ஜெயசீலன், தங்கம் முரளி, சே. பிரேம் ஆனந்த், ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, தி.வை.ரவி, என்.இ.கே.மூர்த்தி, தி.வே. முனுசாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே. சுரேஷ் குமார் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஏ.ஜெ.பவுல், வி.தியாகராஜன், பொறியாளர் எம்.மோகன், சங்கீதா சீனிவாசன், பெ. வினோத், த.குமரேசன், பிரவீன்குமார், என்.இளையான், சா.சௌந்தரராஜன், கு.தமிழ்செல்வன், ஒ.ஆர்.நாகூர்கனி, என்.சண்முகம்,

நிஜலிங்கம், க.ஷாஜகான், ஜி.ராஜேஷ் குமார், ஐ.ஜாக்கப், ஆர்.ஆதிகேசவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமாகேஸ்வரன், மசெ.ராஜேஷ், பிரியாகுமார், ஆவடி மாநகர இளைஞரணி அமைப்பாளர் துர்கா பிரசாத், துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் துணை தலைவர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

கர்நாடக மாநில பதிவுத்துறை குழு

சென்னை பதிவுத்துறை தலைவருடன் சந்திப்பு!

சென்னை, அக்.6-

பதிவுத்துறையில் பொது மக்கள் நலனை முன்னிறுத்தி பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முழுவதுமாக இணைய வழியாக முத்திரை தீர்வை மற்றும் பதிவுக்கட்டணம் செலுத்துதல், பதிவு செய்த பின்னர் உடனடியாக பத்திரங்களை திரும்ப வழங்குதல், பதிவு செய்த பின்னர் உட்பிரிவு இல்லாத இனங்களில் உடனடியாக பட்டா மாறுதல் செய்தல், நம் பிக்கை இணையம் உட்பட பல முன்னோடித் திட்டங்கள் தமிழ்நாடு அரசின் பதிவுத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் தெலுங்கானா மாநில பதிவுத்துறை துணைத்தலைவர் தலைமையிலான அலுவலர்கள் குழு தமிழ்நாட்டின் பதிவுத்துறையின் மேம்பட்ட சிறப்பான செயல்பாடுகள் குறித்து அறிந்து கொள்வது தொடர்பாக சென்னை வந்து திட்டங்களை கேட்டறிந்தனர். அதனை தொடர்ந்து தற்பொழுது கர்நாடக மாநில பதிவுத்துறை அலுவலர்கள் குழு ஒன்று உதவி பதிவுத்துறைத் தலைவர் தலைமையில், நேற்று (05.10.2024) பதிவுத்துறை அலுவலகங்களை பார்வையிட்டு, பின்னர் பதிவுத் துறை தலைவரை சந்தித்து தமிழ்நாடு பதிவுத்துறையின் முன்னோடித் திட்டங்களை கேட்டு அறிந்து கொண்டனர்.

ஒழுங்கு நடவடிக்கை!

தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 144வது வட்டச் செயலாளரும் - சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினருமான ஏ.ஸ்டாலின் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 05.10.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

குறைவு என்பதால், தாமதம் ஏற்படுவதாகச் சொன்னார்கள். அதுபோன்ற காரணங்களை மக்கள் இப்போது ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனால், கூடுதலாக பணியாளர்களை அமர்த்தி, இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல மரம் வெட்டும் உபகரணங்களைக் கூடுதலாக இருப்பு வைத்திருப் பதையும் உறுதி செய்ய வேண்டும்.

மழை நீர் சூழ்ந்துள்ள நிலையில், குழாய் வழியாக வழக்கமாக வழங்கும் மெட்ரோ வாட்டரை வழங்க முடியாத சூழலில், டேங்கர் லாரி மூலம் தாமதமின்றி குடிநீர் வழங்குவதை அனைவரும் உறுதிசெய்ய வேண்டும்.

மக்கள் கோரிக்கை!

குடியிருப்புகளை மழைநீர் சூழ்ந்திருக்கும்போது நம்மால் மின் இணைப்பு வழங்க முடியாது. அதனால், தாழ்வான பகுதிகளில் உள்ள மின் வாரியப் பெட்டிகளை இப்போதே உயர்த்தி வைப்பதற்கான நடைமுறையை மேற்கொள்ளவேண்டும். மழை நீர் சூழ்ந்துள்ள ஒட்டுமொத்தப் பகுதியும் இருளில் மூழ்கிவிடும்போது, `வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்காவிட்டாலும், ஜெனரேட்டர் மூலம் பிரதான சாலைகளிலும் இணைப்புச் சாலைகளிலும் ஃபோகஸ் லைட்களை கட்டி எரிய விடுங்கள்' என்று கடந்த மழையின்போது மக்கள் கோரிக்கை வைத்தனர். அதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மழை, வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களின்போது மக்களிடம் பணியாற்றுவதில் நீண்ட நெடிய அனுபவம் உள்ள எங்கள் கழகத்தினரையும், மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்று தானாக முன்வந்து பணியாற்றும் தன்னார்வலர்களையும் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வாட்ஸ்அப் குழுக்கள்!

ஒவ்வொரு வார்டிலும் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், இளைஞர்கள், தன்னார்வலர்களைக் கொண்ட வாட்ஸ்அப் குழுக்களை நாம் உருவாக்க வேண்டும். மீட்புப் பணி, உணவுப் பொருட்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது போன்ற பணிகளில் அவர்களை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் சட்டமன்ற உறுப்பினர்களின் தலைமையில் இயங்கும்படி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்களை அறிவுறுத்த வேண்டும். சிதிலமடைந்த நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள், பழமையான சுனாமி குடியிருப்புகள் போன்ற இடங்களில் வாழும் மக்களை எச்சரிக்கை விடுத்து, அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்க வேண்டும்.

மழைநீர் தேங்கும் பகுதிகள், ரிலீஃப் சென்டர்கள், மோட்டார்கள், போட் உள்பட நம்மிடம் கையிருப்பில் உள்ள உபகரணங்கள், சமையற்கூடங்கள், தன்னார்வலர்கள் குறித்த விவரங்கள் என ஒட்டுமொத்தத் தகவல்களையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் வகையில், நம் சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறையான இண்டகிரேட்டட் கமாண்ட் அண்ட் கண்ட்ரோல் சென்டர் (Integrated Command and Control Centre) ICCC-ஐ மேலும் பலப்படுத்துவது அவசியம்.

சமூக வலைதளங்களில் வரும் மக்களின் கோரிக்கைகள், புகார்கள், மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகள், அவற்றுக்கான தீர்வுகள் என அனைத்தும் ICCC மூலம் ஒருங்கிணைக்கும் வகையில் இந்தக் கட்டுப்பாட்டு அறை இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒருங்கிணைப்பு வேண்டும்!

மழை நேரத்தில் நான் தினமும் அந்தக் கட்டுப்பாட்டு அறைக்கு வந்து, அன்றன்று நடந்தப் பணிகளை ஆய்வு செய்து மறுநாள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் அறிவுறுத்தப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். `மக்கள் பிரதிநிதிகளும் அரசு அலுவலர்களும் அதிகாரிகளும் நம்முடன் களத்தில் இருக்கிறார்கள்' என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டால், `அரசாங்கம் நம்முடன் நிற்கிறது. இந்த மழையை சமாளித்துவிடலாம்' என்ற நிம்மதி மக்களுக்கு வந்துவிடும். அந்தவகையில், நாம் ஒவ்வொருவரும் நம் பணிகளை அமைத்துக்கொள்வோம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எப்போதுமே அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைப்புடன் செயல்பட்டு வருகிறோம். அதுவும் பேரிடர் நேரங்களில் இந்த ஒருங்கிணைப்பு வழக்கத்தைவிட, அதிகமாக இருக்க வேண்டும். அனைத்து அரசுத் துறைகளும் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மக்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வுகாணும்போது அதற்கான ரிப்ளை பதில்களை உடனுக்குடன் சமூக வலைதளங்களில் அளித்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேரிடர் ரிலீஃப் சென்டர், கம்யூனிட்டி கிச்சன் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் குறித்து, பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். எனவே, அதற்கேற்ப ஒவ்வொருவரும் நம் பணிகளை அமைத்துக்கொள்வோம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நம் சக அமைச்சர் பெருமக்களுடன் சேர்ந்து மூன்று ஆய்வுக் கூட்டங்களை ஏற்கனவே நடத்தியுள்ளோம்அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி, இந்த ஆண்டு பருவ மழையில் இருந்து மக்களைக் காப்பாற்ற உறுதியேற்போம் எனக் கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

பங்கேற்றவர்கள்

இந்த ஆய்வுக் கூட்டத்தில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, வி.செந்தில்பாலாஜி, ஆவடி சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் எஸ்.சுதர்சனம், ஆர்.டி.சேகர், தாயகம் கவி, எம்.கே.மோகன், அரவிந்த் ரமேஷ், மயிலை த.வேலு, ஜோசப் சாமுவேல், காரம்பாக்கம் கணபதி, ஜெ.கருணாநிதி, கே.பி.சங்கர், மருத்துவர் எழிலன், இ.பரந்தாமன், அ. வெற்றியழகன், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, ஜே.ஜே. எபினேசர், பிரபாகரராஜா, ஹசன் மவுலானா,

சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட அவை தலைவர் மா.ராஜ், தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு வருகின்ற 9 தேதி அன்று திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு குறித்து சிறப்புரை ஆற்றினார். உடன் சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணாசாமி, ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜே.ரமேஷ், சி.ஜெரால்டு, பிரபு கஜேந்திரன், வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், காஞ்சனா சுதாகர், ஜெ.மகாதேவன், சன்.பிரகாஷ், ஜி.நாராயணபிரசாத், ஜி.ராஜேந்திரன், பேபி சேகர், பொன்.விஜயன், என்.இ.கே.மூர்த்தி, டி.தேசிங்கு, டி.ராமகிருஷ்ணன், ஆர்.ஜெயசீலன், ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, தங்கம் முரளி, சே.பிரேம் ஆனந்த், தி.வை.ரவி, தி.வே.முனுசாமி, உள்பட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.